□□□□□□□□□□□□□□□ □□□□□□□ □□□□□□□□□ □□□□□□□□□□□□□□□□□□□ | ...

Written by Administrator
Monday, 15 April 2013 07:41 - Last Updated Tuesday, 23 April 2013 11:18

□□□□□□□□□□□□□□□□□□□□□□□□□□□□□□□□□ □□□□: 44□□□□□□□□□□□□□□□□□□□□□□□□ □□□□: 5□□□□□□□□□□□□□□□□□□□□□ □ □□□□□□ 2013



நல்லாட்சியின் இன்றைய தேவையும் முக்கியத்துவமும்

– முனைவர். இரா. வெங்கடேஷ்

நல்லாட்சியின் வரலாற்றுப் பின்னணி

சுதந்திரமடைந்து கடந்த 65 ஆண்டுகளில் ஆட்சி முறையமைவு பல்வேறு மாற்றங்களைக் கண்டு கடந்து வந்துள்ளது. தற்போதைய ஜனநாயக உலகில் பல நாடுகள், பன்னாட்டு நிறுவனங்கள், பொது நல அமைப்புகள், உயர் அதிகார அமைப்புகள் போன்றவற்றில் விவாதிக்கப்படுவதும், நிலைத்த வளர்ச்சி, இறையாண்மை, பாதுகாப்பு ஆகியவற்றுற்கு வலு சேர்க்கும் வகையிலும் உண்மையான ஜனநாயகத்தின் தற்போதைய பரிணாமமாகவும் கருதப்படுகின்ற ஓர் உயர் சிந்தனையே நல்லாட்சித் தத்துவமாகும்.

ஆட்சி பற்றிய இச்சிந்தனை புதிதாக உருவானதன்று. மனித நாகரிகத்தின் சிறப்பினைப் பறைசாற்றுகின்ற ஒருவித வெளிப்பாடுதான் நல்லாட்சி. உள்ளூர் அளவில் மக்கள் பங்கேற்றல், முடிவெடுத்தல், நடைமுறைப்படுத்துதல் போன்ற செயல்களின் தொடர் நடவடிக்கைகளே ஆட்சி எனலாம். 2500 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த தத்துவ அறிஞர் பிளேட்டோ காலத்திலேயே நல்லாட்சி பற்றிய சிந்தனை தோன்றி வளர்ந்தது. எனவேதான் பிளேட்டோ 'குடியரசு' என்ற தனது நூலில் இலட்சிய அரசு (Ideal State) நீதிமுறை (Justice) போன்ற கருத்துக்களை மிக விரிவாக ஆராய்ந்து வழங்கியுள்ளார். தொடர்ந்து அரிஸ்டாட்டிலும் தனது 'அரசியல்' என்ற நூலில் நல்லாட்சி மற்றும் நெறி தவறிய அரசாங்கம் (Preverted Government) பற்றியும் விளக்கியுள்ளார்.

மேற்கத்திய சிந்தனையாளர்கள் மட்டுமின்றி கௌடில்யரும், திருவள்ளுவரும் அரசின் பணிகள் மற்றும் நல்லாட்சியின் மாண்புகள் குறித்து எடுத்துரைத்துள்ளனர். குறிப்பாகத் திருவள்ளுவர் இறைமாட்சி, செங்கோன்மை, நாடு ஆகிய அதிகாரங்களில் அரசு, ஆட்சி முறை மற்றும் நல்லாட்சிக் கூறுகள் பற்றி விவரித்துள்ளார்.

ஒரு அரசானது பொருளாதார வளத்தோடும், நீதி தவறாத தன்மையோடும், வெளிப்படையான நிர்வாகத்தோடும், எளிமைத் தன்மையுடனும், பொதுநல நோக்கத்துடனும், மக்களின் அடிப்படைத் தேவைகளான உணவு, சுகாதாரம், அமைதியான, பாதுகாப்பான வாழ்க்கையைத் தரும் ஆற்றலையும் பெற்றிருக்குமாயின் அந்த அரசானது நல்லாட்சி அரசாகக் கருதப்படலாம் என்கிறார். அந்த வகையில் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து மக்கள் நலன் மேம்படுவதற்கான முயற்சிகளை ஒரு அரசு எடுக்கும் போது அம்மக்களின் எண்ணத்தில் தோன்றும் உன்னத வெளிப்பாடே நல்லாட்சியாகும்.

நல்லாட்சியின் இலக்கணங்கள்

ஒரு நாட்டின் பன்முக வளர்ச்சிக்கும், உலக அரங்கில் தனது நிலையை உயர்த்திப் பிடிப்பதற்கும் நல்லாட்சி என்பது ஒரு கருவியாகின்றது. தொன்று தொட்டு வரும் சிந்தனை என்றாலும் இன்றைய நவீன உலகில் ஏற்பட்டு வரும் மாற்றங்களைக் கருத்தில் கொண்டு பன்னாட்டு அமைப்பான உலக வங்கி நல்லாட்சியின் இலக்கணங்களைப் பின்வருமாறு வரையறுத்துள்ளது.

1) மக்கள் பங்கேற்பு, 2) சட்டத்தின் ஆட்சி, 3)வெளிப்படைத் தன்மை, 4) பொறுப்பாண்மை, 5) தகுதி மற்றும் செயல்திறன். 6) பாரபட்சமற்ற தன்மை, 7) இணக்கத் தன்மை, 8) விரைவுத் தன்மை

மேற்காணும் கூறுகளை உள்ளடக்கி ஒரு நிர்வாக முறைமை சீரிய முறையில் செயல்படுமானால் அந்நிர்வாகம் மக்கள் நலன் பேணும் குடிமக்கள் சார் நல்லாட்சி நிர்வாகமாகப் பரிணமிக்க முடியும்.

ஜனநாயகமும் நல்லாட்சியும்

ஜனநாயகமும் நல்லாட்சியும் பிரித்துப் பார்க்க முடியாதபடி ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. ஜனநாயகத்தின் மாண்புக் கூறுகள் மதிப்பிழந்து போகாத நாட்டிலோ, அல்லது சமுதாயத்திலோ தான் நல்லாட்சி நிலவ முடியும். அரசின் நிர்வாகச் செயல்பாடுகள், அதிகார அமைப்புகளின் நடவடிக்கைகள் பாரபட்சமற்ற முறையில் சிறப்புற்று விளங்குமானால் அங்கு இயற்கையாகவே நல்லாட்சிச் சிந்தனை மிளிர்ந்து நிற்கும். மக்கள் பங்கேற்புடன், பொதுநல நோக்குடன் ஆட்சி அதிகாரத்திலிருப்பவர்கள் செயல்படும் சூழலில் நல்லாட்சித் தத்துவம் மேன்மையடைகின்றது. இன்று பல நாடுகளில் ஜனநாயகம் வெறும் கொள்கையளவில் மட்டுமே இருப்பதால் 'நல்லாட்சி' என்பது கனவாகப் போய்விடுகின்றது.

முனைவர். இரா. வெங்கடேஷ் உதவிப் பேராசிரியர் பொது நிர்வாகம் தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோயம்புத்தூர்.



பெரும்பாலும் மேற்கத்திய நாடுகளைப் பொறுத்தவரை நல்லாட்சித் தத்துவம் ஓரளவிற்கு மதிக்கப்படுகின்றது. காரணம் மக்களின் அரசியல் விழிப்புணர்வு, அறிவுத் தன்மை, கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் விதம், நுட்பமான ஜனநாயக நடைமுறைகள், வளர்ச்சியடைந்த சமூக, பொருளாதாரத் தன்மை, வெளிப்படையான அணுகுமுறை ஆகியவைகளைச் சொல்லலாம்.

இந்தியா போன்ற வளரும் நாடுகள், மூன்றாம் உலக நாடுகளைப் பொறுத்தளவில் நல்லாட்சி என்பது தொடர்ந்து பயணிக்க வேண்டிய ஓர் இலக்காகவே உள்ளது.

நல்லாட்சியைப் பாதிக்கும் காரணிகள்

ஆட்சியியல் நெறிமுறைகள் சார்ந்து சிந்தித்துப் பார்த்தால் நல்லாட்சியைப் பாதிக்கும் காரணிகளாகச் சிலவற்றை சுட்ட முடியும். அவை,

- அதிகாரக் குவிப்பு
- மக்கள் நலன் பேணாமை
- முடிவெடுத்தலில் மக்கள் பங்கேற்பின்மை
- அதிகார அமைப்புகளின் பொறுப்பற்ற செயல்பாடு
- செயல்திறன் குறைந்த நிர்வாக முறை
- சர்வாதிகாரத் தன்மையின் வீச்சு
- மக்களுக்குப் பதிலளிக்கும் கடமையிலிருந்து விலகுதல்
- சூழலுக்கேற்ப மாற்றங்களைஃசீர்திருத்தங்களை ஏற்றுக் கொள்ளாமை
- முறையான வளப்பங்கீட்டின்மை
- சமூக நீதியுடன் கூடிய நீடித்த மேம்பாடு இல்லாமை
- சமூக, பொருளாதார ஏற்றத் தாழ்வுகள்

1990ம் ஆண்டில் நாட்டில் தளர்த்தப்பட்ட பொருளாதாரச் சூழ்நிலை உருவான போது உலக வர்த்தகத்துடன் நாம் ஒன்றிணைய வேண்டியது கட்டாயமாயிற்று. மேலும் தேவையான சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டதால் நல்ல பயன்களைப் பெற முடிந்தது. எனவே சாதாரண மக்களும் வறுமையிலிருந்து மீண்டு நல்வாழ்க்கை பெற வேண்டுமானால் நல்லாட்சி வழங்குவது தான் ஒரு தகுதிவாய்ந்த, மாட்சிமை பொருந்திய அரசின் உயர் முன்னுரிமையாக இருக்க முடியும். அத்தகைய உயர் முன்னுரிமை நிலைபெற வேண்டுமானால் நிர்வாக அமைப்புகள் மற்றும் செயல்முறைகளில் சில மாற்றங்களை/சீர்திருத்தங்களை மேற்கொள்வது தவிர்க்க முடியாதது. அகில இந்திய அளவில் அமைக்கப்பட்ட 2வது நிர்வாகச் சீர்திருத்தக் குழுவின் 12வது அறிக்கை "மக்கள் சார்ந்த நிர்வாகம் அல்லது மக்கள் விரும்பும் நிர்வாகம் தான் ஒரு நல்லாட்சியின் இதயம்" என வலியுறுத்துகின்றது. அத்தகைய மக்கள் விரும்பும் நல்லாட்சியை வழங்க வேண்டுமானால் புதிய அணுகுமுறைகள் தேவைப்படுகின்றது. அவற்றுள் சில:

- நீண்ட கால நோக்கில் பல பரிமாணத் தன்மையுடன் நிர்வாக அமைப்புகள் இலக்கு நோக்கிச் செயல்படுதல் வேண்டும்.
- மக்கள் அரசுடன் எளிதில் தொடர்பு வைத்துக் கொள்ளும் உயர்நிலை அதிகார அமைப்புகளில் உள்ளாட்சி நிர்வாகம், அரசு சாரா நிறுவனங்கள், சமுதாய அமைப்புகள், இதர மக்கள் அமைப்புகளை ஒருங்கிணைத்து ஒரு கட்டமைப்பாகச் செயல்படுதல் அவசியம்.
- மக்கள் பங்கேற்பினைப் பெரிதும் ஊக்கப்படுத்துதல்.
- மக்களின் தேவைகளை உணரச் செய்யும் வகையில் விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
- இலக்குகளை அடைவதற்கான ஆற்றலையும் தகுதியையும் மேம்படுத்துதல்.
- மக்களின் ஈடுபாட்டை அதிகரிப்பதன் மூலம் அவர்களின் நம்பிக்கையைப் பெறுதல்
- அரசியல் நோக்கற்ற அணுகுமுறைகள்
- வெளிப்படையான திட்டமிட்ட செயல்பாடு
- நியாயமான, நேர்மையான, விருப்பு வெறுப்பு கலவாத திறமையான, பொறுப்பான, கடமையுணர்வுடன் கூடிய நிர்வாக முறையமைவுகள்.
- அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி சார்ந்த அணுகுமுறை.
- பல்துறை முயற்சிகளை ஒருங்கிணைத்தல்
- மாற்றங்கள், சீர்திருத்தங்களை ஏற்றுச் சரியான வழியில் செயல்படுத்தும் குறைந்தபட்ச கருத்தொற்றுமை
- கொள்கை ரிதியிலான சீர்திருத்தங்களை விட அமைப்பு ரிதியிலான சீர்திருத்தங்களுக்கு முன்னுரிமை தருதல்.

மனித மேம்பாடு மற்றும் அது சார்ந்த இலக்கு நோக்கிய பொருளாதார வளர்ச்சி ஆகியவை நிலைபெறுவதற்கான செயல்பாட்டுத் தளமாக நல்லாட்சித் தத்துவம் கருதப்படுவதால் அதனை நெருங்குவதற்கான முயற்சிகளில் சில நாடுகள் ஈடுபட்டு வருகின்றன. மேற்கண்ட மாற்றங்களை முன்னுரிமை அடிப்படையில் திட்டமிட்டுச் செயல்படுத்துவதன் மூலம் நல்லாட்சியை எட்டுவது சாத்தியம் தான். ●